பக்கங்கள்:-21

காலை முரசு

## தெஹிவளையில் இளைஞர் ஒருவர் சுட்டுப் படுகொலை!



தெஹிவளையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 06▶

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 22 | ஞாயிற்றுக்கிழமை | 07.12.2025 | அதிர்வு 129

# டிசம்பர் 14 வரை இலங்கைக்கு ஆபத்து!



### வடக்கு, கிழக்கு, மலையக மக்கள் மிகவும் அவதானம் என்று பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எச்சரிக்கை

இலங்கை முழுவதிலும் இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று இலங்கையின் தென்மேற்கு பகுதியை மையமாகக் கொண்டு வளிமண்டல தளம்பல் நிலை உருவாகும் வாய்ப்புள்ளது.

அத்தோடு அதிக ஈரப்பதன் கொண்ட கீழைக்காற்றுக்களின் வருகையும் இருக்கும்.

எனவே, இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை நாடு முழுவதும் 04▶

### பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் தொகை வழங்குவதில்

# வடக்கில் எவ்விதமான முறைகேடுகளுக்கும் அரசு இடமளிக்காது!

### ஆளுநர் வேதநாயகன் திட்டவட்டம்



"வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்த சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித் தொகை வழங்குவதில் எவ்விதமான முறைகேடுகளுக்கோ, பாரபட்சங்களுக்கோ அல்லது ஊழலுக்கோ இந்த அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. 06▶

# பேரிடர் மரணம் தொடர்ந்து அதிகரிப்பு இதுவரை 618 பேரின் சடலங்கள் மீட்பு

### 209 பேரின் நிலை குறித்து இன்னும் தகவல் இல்லை



இலங்கையில் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 618 ஆக அதிகரித்துள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று இரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த அனர்த்தங்களால் 209 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் அந்த நிலையம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலையால் நாட்டின் 25 மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 5 இலட்சத்து 83 ஆயிரத்து 30 குடும்பங்களைச் சேர்ந்த 20 இலட்சத்து 78 ஆயிரத்து 436 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 04▶




'பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக' மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் வீழ்ந்து, மீண்டெழ முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த இலங்கையை இயற்கைப் பேரிடர் 'டித்வா' பெரும் புயல் மூலம் புரட்டிப் போட்டு விட்டுப் போய்விட்டது.

இதிலிருந்து நாடு எப்படி மீளப் போகின்றது என்பதுதான் இலங்கையர் ஒவ்வொருவரையும் இன்று குடையும் வினாவாக இருக்கின்றது.

'மந்திரத்தால் மாங்காய் விழுத்துபவர் போல' பேரிடர் பாதிப்பு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தொகை நிதி உதவி அளிக்கப்படும் என்று நாட்டின் தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தன்பாட்டுக்கு பட்டியலிட்டு அறிவித்து விட்டார்.

இந்தச் சமயத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் தெரிவித்த சில கருத்துக்கள் இந்தச் சமயத்தில் நோக்கப்பட வேண்டியவை.

"நாட்டை மீளக் கட்டியெழுப்ப ஜனாதிபதி 06▶





# மலையக மக்களுக்கு நில உரிமைகளைத் தந்து பாதுகாப்பான இடங்களில் வீடுகள் வழங்குங்கள்

## நிவாரண உதவிகளைக் கையளிக்கும் நிகழ்வில் சாணக்கியன் கோரிக்கை

அனர்த்த கால இழப்பீடுகள் சம்பந்தமாக ஜானதிபதி வெளியிட்ட அதிரடி நடவடிக்கைகள் தொடர்பான அறிவிப்புகளை நாம் வரவேற்கின்றோம்.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

நேற்றையதினம் முறக்கொட்டாஞ்சேனை, கிரான் மற்றும் கிண்ணியடி போன்ற இடங்களில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட மக்களுக்கான நிவாரண உதவிகள் இரா.சாணக்கியன் தலைமையிலான குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டன. அச்சமயமே மேற்படி கருத்தை அவர் முன்வைத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகளை நாங்கள் வரவேற்கின்றோம்.

எமது மாவட்டத்திலும் வெள்ளத்தினால் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு புதிய வீடுகள் மற்றும் புதிய காணிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் ஜனாதிபதி அதிகாரிகளிடமிருந்து தரவுகளைப் பெற்று வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

மலையகத்தில் மக்களது வீடுகள் மண்சரிவுக்கு உள்ளாகக்கூடிய இடங்களிலேயே காணப்படுகின்றன. பல தசாப்தங்களாக அவர்கள் கோரிக்கை விடுத்துள்ள நில உரிமையினை வழங்கி, அவர்களுக்கான வீடுகளையும் கட்டிக் கொடுப்பது தற்காலத்தில் சிறந்தது. இதனூடாக அவர்கள் மண்சரிவிலிருந்து பாதுகாப்பு பெறக்கூடியதாகவும், நில உரிமையை அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

– என்றார் அவர்.














# பாபா நூற்றாண்டு விழா ஓவியச் சிறப்பு

கொழும்பு-13 சாயி மத்திய நிலையத்தில் சாய் பாபாவின் நூற்றாண்டு விழா மிக சிறப்பாக அண்மையில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் பிரபல ஓவியரும் சாயி பக்தருமான கௌசிகன் மகாபாரதத்தை மனதில் முன்நிறுத்தி, சீரடி சாய் பாபா ஒன்பது குதிரைகள் கொண்ட தேர் சாதியாக - சத்ய சாய் பாபாவை அழைத்துச்செல்லும் ஓவியம் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது.

சாயி நிலையத் தலைவர் எஸ்.என். உதயநாயகம் தலைமையில் உயர் நீதிமன்ற சிரேஷ்ட நீதியரசர் எஸ். துரைராஜா ஓவியக்காட்சியை திரைநீக்கம் செய்துவைத்து, ஓவியர் கௌசிகனை கௌரவிக்கின்றமையை படங்களில் காணலாம்.



# ஜப்பான் பேரிடர் நிவாரணப் பிரிவின் மருத்துவ குழு சிலாபத்தில் களத்தில்





**(உடப்பு க.மகாதேவன்)**

ஜப்பான் பேரிடர் நிவாரணப் பிரிவின் மருத்துவ குழுவினால் சிலாபத்தில் தற்காலிக மருத்துவமனை ஊடாக வெளிநோயாளர் சேவைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

புத்தளம் மாவட்டத்தின் சிலாபத்தில் ஜப்பான் பேரிடர் நிவாரணப் பிரிவின் மருத்துவக் குழுவினால் வெளிநோயாளர் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் நாளிலேயே 20 நோயாளர்கள் ஆலோசனைகளுக்காக வந்துள்ளனர்.

சமீபத்தைய டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளநீர் பாதிப்பால் கடுமையாக சேதமடைந்த சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையுடன் இணைந்து, அதை வலுப்படுத்தும் வகையில் ஜப்பான் பேரிடர் நிவாரணப் பிரிவுக் குழுவின் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

மருத்துவ ஆய்வுகூடம், எக்ஸ்ரே, அல்ட்ராசவுண்ட் ஆகிய வசதிகளுடன் விரைவில் முழு அளவில் செயல்பட்டு, தினமும் நூறுக்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க ஜப்பான் பேரிடர் நிவாரணப் பிரிவின் குழு திட்டமிட்டுள்ளது.

# காலாவதியான உணவுகளை விற்பனை செய்த வியாபார நிலையங்களுக்கு தண்டப்பணம்



பருத்தித்துறையில் காலாவதி திகதி கடந்து உணவுப் பொருள்களை விற்பனை செய்தமை தொடர்பில் இரு வியாபார நிலையங்களுக்கு 133,000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் காலாவதி கடந்த உணவுப் பொருள்களை நுகர்வோரிற்கு விற்பனை செய்தமை தொடர்பாக பொதுமகனால் பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இது தொடர்பில் உடனடியாகவே இரு வியாபார நிலையங்களிலும் பரிசோதனை மேற்கொண்ட பருத்தித்துறை பொதுச்சுகாதார பரிசோதகர், காலாவதி கடந்த உணவுப்பொருள்களை கைப்பற்றியதுடன், இரு வியாபார நிலைய உரிமையாளரிற்கும் எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது உரிமையாளர்கள் தம்மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில், 133,000 தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## டிசம்பர் 14 வரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல பகுதிகளுக்கும் மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக 09.12.2025 முதல் 12.12.2025 திகதிகளில் நாடு முழுவதும் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

குறிப்பாக மத்திய மாகாணம், தென் மாகாணம், மேல் மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம், வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், வட மத்திய மாகாணம் போன்றவற்றின் பல பகுதிகளுக்கும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

மிக முக்கியமாக மேற்குறிப்பிட்ட இந்த நாட்களில் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், மேல் மாகாணம், சபரகமுவா மாகாணம் போன்றன ஏனைய பகுதிகளை விட அதிக மழையைப் பெறும் வாய்ப்புள்ளன.

மலையக உறவுகளே மேலும் சில நாட்கள் நீங்கள் மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பான இடங்களில் இருப்பதுதான் சிறந்தது.

இன்றும் மலையகத்தின் பல பிரதேசங்களினதும் மண், ஈர உள்ளடக்கத்தை முழுமையாகக் கொண்டுள்ளது.

டிட்வா புயலின் பின்னர் இன்று வரை ஆவியாக்கத்துக்குரிய (நீர் மற்றும் மண்) வெப்பநிலை நிலவவில்லை. மிகக் குறைவான சராசரி வெப்பநிலையே நிலவுகின்றது. குறிப்பாக கடந்த 3 நாட்களாக நுவரெலியா மாவட்டத்தில் சராசரி வெப்பநிலையாக 11 பாகை செல்சியஸ் வெப்பநிலையே நிலவுகின்றது.

இன்னமும் பல நீர்த்தேக்கங்கள் வான் பாய்கின்றன. ஆறுகள் முழுக்கொள்ளவோடு பாய்கின்றன.

மலையகம் முழுவதுக்கும் அவ்வப்போது கன மழையைத் தரக்கூடிய வளிமண்டல தளம்பல் நிலை தென்மேற்கு இலங்கையில் இன்று உருவாகும் வாய்ப்புள்ளது.

இந்தச் சூழ்நிலைகள் மலையகத்தின் பல பகுதிகளிலும் மண்சரிவு அபாயத்தை உருவாக்கும். எனவே தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களில் இருப்பதே சிறப்பானதாகும்.

இது தொடர்பான அதிகாரிகளும் மக்களுக்கு இது தொடர்பாக விழிப்பூட்டனும் இதனை அடுத்த சில நாட்களின் பின்னரே உறுதிப்படுத்த முடியும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் அதாவது எதிர்வரும் 08.12.2025 முதல் 14.12.2025 வரை கனமழை கிடைக்கும் என்பதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தாழ்நிலப் பகுதிகளிலும், குளங்கள் வான் பாயும் பகுதிகளுக்கு அண்மித்தும், ஆறுகளுக்கு அண்மித்





வேண்டும்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களின் குளங்களின் நீர் மட்டத்தை தற்போது, முழு வழங்கல் மட்டத்தில் பேணாமல் சற்று குறைந்த மட்டத்தில் பேணலாம்.

ஏனெனில் எதிர்வரும் ஜனவரி நடுப்பகுதி வரை வடகீழ் பருவமழை கிடைக்கும் என்பதனால் பின்னாட்களில் கிடைக்கும் மழையை வைத்து முழுக்கொள்ளளவைப் பேணலாம்.

குறிப்பாக டிசம்பர் மாதத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது வாரத்தில் வங்காள விரிகுடாவில் இரண்டு காற்றுச் சுழற்சிகள் உருவாகி இலங்கை அருகே நிலை கொள்ளும் வாய்ப்புண்டு. எனிதும் உள்ள மக்கள் இது தொடர்பாக அவதானமாக இருப்பது அவசியம்." – என்றார்.

## பேரிடர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அவர்களில் 29 ஆயிரத்து 874 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 124 பேர் 990 பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

4 ஆயிரத்து 71 வீடுகள் முழுமையாகவும், 71 ஆயிரத்து 121 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இடதுசாரி அரசியல் இயக்கத்துக்கு தனது வாழ்வை அர்ப்பணித்த “திரு”

- வீரகத்தி தனபாலசிங்கம் -

வல்லிபுரம் திருநாவுக்கரசுவின் (தோழர் திரு) மரணம் இளவயதில் இருந்தே இடதுசாரி அரசியல் இயக்கத்துக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த – கொள்கைப்பற்றும் நேர்மையும் கொண்ட – ஓர் அரசியல் செயற்பாட்டாளரை எம்மத்தியில் இருந்து அபகரித்துச் சென்றுவிட்டது.

சில வருட கால சுகவீனத்துக்கு பிறகு தனது 88 ஆவது வயதில் (2025 அக்டோபர் 31) திரு இயற்கை எய்தினார். அவரை நீண்ட நாள்களாகச் சந்திக்க முடியாமல் போனது எனக்கு மிகுந்த கவலையை தருகிறது.

நான் வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் இருந்து திருவை அறிவேன். பின்னர் தினக்குரல் பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும் அடுத்து பிரதம ஆசிரியராகவும் நான் பணியாற்றிய சுமார் 15 வருட காலத்தில் எனக்கும் அவருக்கும் இடையிலான நெருக்கம் மேலும் அதிகரித்தது. நானும் இடதுசாரி இயக்க ஆதரவாளர் என்பதும் அதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

தினக்குரல் ஆரம்பித்த 1990 களின் பிற்பகுதியில் இருந்து சுகவீனமடையும் வரை திரு தவறாமல் வாரந்தோறும் அல்லது இரு வாரங்களுக்கு ஒரு தடவை அரசியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வந்தார். கொழும்புக்கு வெளியே கல்கிசையில் வசித்துவந்த திரு அடிக்கடி கொழும்பு முகத்துவாரம் பகுதியில் அமைந்திருந்த தினக்குரல் அலுவலகத்துக்கு சிரமம் பாராது வருகை தந்து எம்மைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பல்வேறு விடயங்கள் குறித்தும் அவரிடமிருந்து ஆழமான கருத்துக்களை எம்மால் அந்த சந்திப்புக்களின்போது அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

திருவின் கட்டுரைகள் சமூகத்தின் பல்வேறு பிரிவினராலும் ஆர்வத்துடன் வாசிக்கப்பட்டன என்பதை ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் நான் நன்கு அறிவேன். பல்வேறு அரசியல் பிரச்சினைகள் குறித்து திரு எழுதினாலும் போர்க்காலத்தில் தமிழ்மக்கள் அனுபவிக்க வேண்டியிருந்த இன்னல்களை வெளியுலகிற்கு கொண்டுவரும் நோக்கில் தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் எழுதிய கட்டுரைகள் முக்கியமானவை.

அவருடனான சந்திப்புக்களின் போது அந்த கட்டுரைகளை தொகுத்து நூல் வடிவில் கொண்டுவர வேண்டும் என்று அவரிடம் நான் கூறினேன். அவருக்கும் அவ்வாறு செய்ய வேண்டும் என்ற அக்கறை இருந்தது. ஆனால், திரு சுகவீனமடைந்த பிறகு அதைப் பற்றி பேசுவதற்கோ அல்லது செயலில் இறங்குவதற்கு ஊக்கம் கொடுப்பதற்கோ வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அவரது குடும்பத்தவர்கள் குறிப்பாக வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகள் அவரது கட்டுரைகளை தெரிவுசெய்து



தொகுத்து நூலாக வெளியிடுவதற்கு முயற்சிக்க வேண்டும். அது அவருக்கு செய்யும் பொருத்தமான அஞ்சலியாக இருக்கும் என்பது எனது அன்பான வேண்டுகோள்.

இடதுசாரி இயக்க அரசியல் வாழ்வில் திரு நீண்டகாலம் இடர்பாடுகளைச் சந்தித்தார். ஆனால் அந்த இடர்பாடுகளின் விளைவான நெருக்குதல் அவரது அரசியல் இலட்சியத்தில் தளர்வை ஏற்படுத்துவதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை.

அரசாங்க சேவையில் ஒரு நிருவாக அதிகாரியாக பணியாற்றிய திரு இளமைக்காலத்தில் இருந்து லங்கா சமசமாஜ கட்சியின் செயற்பாடுகளில் பங்கேற்றார். அரசாங்க எழுதுவினைஞர் சேவைச் சங்கத்தின் முக்கியமான செயற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்த திரு 1980 ஜுலை பொது வேலைநிறுத்தத்தை அடுத்து வேலை இழக்க வேண்டியேற்பட்டது. பின்னர் மீண்டும் வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டபோது அரசியல் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடும் ஆர்வம் காரணமாக அவர் இணைந்து கொள்ளவில்லை.

சமசமாஜ கட்சி தலைவர்களின் போக்குகளில் வெறுப்படைந்த வாசுதேவ நாணயக்கார, கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன போன்ற அன்றைய இளந்தலைவர்கள் நவசமசமாஜ கட்சியை ஆரம்பித்தபோது அவர்களுடன் இணைந்துகொண்ட திரு தனது இறுதி மூச்சுவரை அதே பாதையில் பயணித்தார். விக்கிரமபாகுவுடன் எனக்கு அறிமுகத்தை ஏற்படுத்தித் தந்தவரும் திருதான்.

திருவின் மறைவுடன் வடபகுதியைச் சேர்ந்த இடதுசாரி இயக்கத்தின் பழைய தலைமுறை ஒன்றின் காலப்பகுதி முடிவுக்கு வருகிறது என்லாம். திரு பயனுறுதியுடைய அரசியல் வாழ்க்கையின் மூலம் முன்னுதாரணமான ஒரு மரபை எமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவர் சார்ந்த அரசியல் இயக்கத்துக்கும் குடும்பத்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

# நீர் விநியோகம் 90 வீதம் வழமைக்கு!

அனர்த்த நிலைமையால் நீர் வழங்கல் கட்டமைப்புக்கு ஏற்பட்ட பாதிப்புகளில் சுமார் 90 சதவீதமானவை தற்போது வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

அனர்த்த நிலைமை காரணமாக நீர் வழங்கல் சபைக்கு சொந்தமான 343 நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 156 நிலையங்கள் செயலிழந்தன என்று நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக இதன் காரணமாக கண்டி மாவட்டத்தின் நீர் வழங்கல் நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டிருந்தன என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நீர் வழங்கல் ஊழியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக, சேதமடைந்த நீர் வழங்கல் அமைப்புகளில் சுமார் 90 சதவீதத்தை வழமைக்கு கொண்டு வர முடிந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடனடியாக செயற்பட்டு, சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி, இரண்டு வாரங்களுக்குள் சர்வதேச நன்கொடையாளர் மாநாடொன்றை கொழும்பில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டில் தற்போது இடம்பெற்றுள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பையும் சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார இழப்பையும் ஒப்பிட்டுபார்க்கும்போது, சுனாமியால் 1 பில்லியன் டொலருக்கும் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில் 6 முதல் 7 பில்லியன் டொலர் இழப்பு ஏற்படுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால், இந்த அனர்த்தம் 6 தடவைகள் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதற்கு சமமாகும். அத்துடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3முதல் 5 வீத இழப்பாகும்.

இந்த அனர்த்தம் தொடர்பில் இப்போது கவனிக்கும் சர்வதேச நாடுகளின் அவதானம் இன்னும் இரண்டு வாரங்களில் வேறு பகுதிக்கு திருப்பிவிடும். அதனால் ஜனாதிபதி உடனடியாக செயற்பட்டு, சர்வதேச நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி, இரண்டு வாரங்களுக்குள் சர்வதேச நன்கொடையாளர் மாநாடொன்றை கொழும்பில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட இந்தியா, ஜப்பான், ஜேர்மன், ஐக்கிய அரபு இராஜ்ஜியம் போன்ற நாடுகள் மற்றும் கட்டார், சவூதி அரேபியா நாட்டு தலைவர்களுடன் தொடர்பு கொண்டு, சர்வதேச நன்கொடை மாநாடொன்றை நடத்தி, 2,3பில்லியன் டொலர்களை தேடிக்கொள்ள வேண்டி இருக்கிறது. அதற்கானதொரு முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எமது ஓய்வுபெற்ற தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன போன்ற அனைவரையும் ஒன்றிணைத்துக் கொண்டு, ஏற்பட்டுள்ள இந்த தேசிய அனர்த்தம் தொடர்பில் கலந்துரையாட வேண்டும். கட்சித் தலைவர் என்ற வகையில் இந்த கோரிக்கையை ஜனாதிபதிக்கு முன்வைக்கிறேன். அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பது தொடர்பில் எங்களுக்குப் பிரச்சினையில்லை. அது அவ்வாறு இடம்பெறட்டும்.

அதற்கு மத்தியில் இந்த அனர்த்தத்தில் இருந்து மீள நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைத்து தலைவர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் எமக்கு தேவையான இந்த பாரிய நிதியை தேடிக்கொள்ள முடியாது.

அவ்வாறு இல்லாவிட்டால், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி, நாங்கள் கடன் மீளச்செலுத்தும் காலத்தை மேலும் 3 வருடங்களுக்காவது ஒத்திவைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். இந்த இரண்டு மாற்று வழிகளில் ஒன்றை நாங்கள் மேற்கொள்ள வேண்டும்."

– இப்படி ஹக்கீம் தெரிவித்துள்ள கருத்து முக்கியத்துவம் பெறுகிறது.

சர்வதேச நன்கொடையாளர்களின் மாநாட்டைக் கூட்டுவதோ அல்லது வெளிநாடுகளுக்கு மீளச் செலுத்த வேண்டிய கடன் நிலுவைக் கொடுப்பனவுகளை 2028 க்கு பின்னரும் மேலும் 3 ஆண்டுகள் தள்ளிப் போடுவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவதோ சிறிய விடயங்கள் அல்ல.

இரண்டிலும் ஆட்சித் தரப்பிற்கு புதிய புதிய நிபந்தனைகள் சர்வதேசத்தினால் விதிக்கப்படும் ஆபத்து உண்டு.

புலிகளுடன் சமாதானப் பேச்சு நடந்த 2003 ஆம் ஆண்டுக் காலத்தில் நோர்வேயிலும், அமெரிக்காவிலும் இலங்கைக்கு உதவும் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டின் ஆயத்தக் கூட்டங்களும், ஜப்பானின் டோக்கியோவில் உதவும் சர்வதேச நாடுகளின் மாநாடும் நடைபெற்றன.

அப்போது தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி சர்வதேச நன்கொடையாளர்கள் நிபந்தனை விதித்தனர். அது போன்று இப்போதும் சர்வதேச நன்கொடையாளர்களுக்குப் பின்னால் போனால் அவர்கள் தேசிய இன பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உட்பட மேலும் பல விடயங்களில் புதிய நிபந்தனைகளை முன்வைக்கக்கூடிய சாத்தியங்கள் அதிகம் உண்டு.

அதே சமயம் சர்வதேச நாடுகளுக்கான கடன் மீளளிப்பை மேலும் 3 ஆண்டுகள் தள்ளிப்போடும் கோரிக்கையை சர்வதேசநாணயநிதியம்மூலம்கையாண்டாலும் கூட, அதை ஒட்டியும் புதிய புதிய பொருளாதார நிபந்தனைகள் அரசுக்கு நிச்சயம் வரும்.

இந்த நிபந்தனைகளை ஏற்று செயல்படுவதற்கு அரசு சம்மதம் என்றால் மட்டுமே இந்த இரண்டு வழிகளில் ஒன்றின் மூலம் பொருளாதாரப் பாதிப்புக்கள் மற்றும் நெருக்கடிகளில் இருந்து சற்று நாட்டை ஆசுவாசப்படுத்தும் வாய்ப்பு கிட்டும்.

என்ன செய்யப் போகின்றது அநுரா வின் அரசு? பார்த்திருப்போம்!

---

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது ஊழலை முற்றாக ஒழித்து, நேர்மையான நிர்வாகத்தை நிலைநாட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கமாகும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அணமைய நாட்களில் உதவித்தொகை வழங்கல் தொடர்பில் முன்வைக்கப்படும் பல்வேறு கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்திய ஆளுநர், இது குறித்து நேற்று விசேட தெளிவுபடுத்தலை வெளியிட்டார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"ஜனநாயகக் கட்டமைப்பில் அரச செயற்பாடுகள் குறித்து கேள்விகள் எழுப்பப்படுவதையும், விழிப்புடன் இருப்பதையும் நாம் வரவேற்கின்றோம். ஆனால், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நிற்கும் மக்கள் மத்தியில், உண்மைக்குப் புறம்பான தகவல்களைப் பரப்பி குழப்பத்தை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பது சமூகப் பொறுப்புள்ள அனைவரதும் கடமையாகும்.

உதவித்தொகை வழங்கல் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளருடன் விரிவாகக் கலந்துரையாடினேன். அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு அமையவே பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் கிராம மட்ட ஏனைய அலுவலர்கள் ஊடாகத் தெரிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எவ்வித இரகசியத்தன்மையும் இல்லை. உதவித்தொகை பெறத் தகுதியான வர்களின் பெயர்ப்பட்டியல் அந்தந்தப் பகுதிகளில் பகிரங்கமாகத் காட்சிப்படுத்தப்படும். இதனை மாவட்ட செயலாளரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனவே, தகுதியான எவரும் விடுபடவோ, தகுதியற்ற எவரும் உள்நுழைவதற்கோ இதில் வாய்ப்புகள் இல்லை.

மிக முக்கியமாக, மக்களுக்கான உதவித்தொகை இன்னமும் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படவில்லை. அவ்வாறு பணம் வைப்பிலிடப்படும் முன்னரே, 'முறைகேடுகள் நடந்துவிட்டதாக' அரைகுறைத் தகவல்களைக் கொண்டு பரப்பப்படும் செய்திகள் அடிப்படையற்றவை. தெரிவுப் பட்டியல்கள் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் இடம்பெறும் என்பதால், பொதுமக்கள் தேவையற்ற வதந்திகளை நம்பி அச்சமடையத் தேவையில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இந்த அரசாங்கத்தின் பிரதான இலக்கு, அரச இயந்திரத்தில் புரையோடிப்போயிருந்த ஊழலை ஒழிப்பதேயாகும். எனவே, மக்களின் கண்ணீரில் இலாபம் தேடும் ஈனச் செயலுக்கோ அல்லது முறைகேடுகளுக்கோ இனி இடமில்லை.

நிவாரணப் பணிகளில் ஈடுபடும் எந்தவொரு அதிகாரியாவது – அவர் எந்த நிலையிலிருந்தாலும் – தவறிழைத்தாலோ, ஊழலில் ஈடுபட்டாலோ அல்லது பாரபட்சம் காட்டினாலோ அவருக்கு எதிராக கடுமையான சட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதில் எவ்வித சமரசமும் இல்லை.

சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களைக் கடந்து, முறைகேடுகள் தொடர்பில் யாரிடமேனும் தகுந்த ஆதாரங்கள் இருப்பின், அதனை எனது கவனத்துக்கு நேரடியாகக் கொண்டு வரலாம். ஆதாரபூர்வமான முறைப்பாடுகள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச இயந்திரம் மக்களுக்காகவே இயங்குகின்றது. இந்த இக்கட்டான நேரத்தில், காழ்ப்புணர்ச்சிகளைத் தவிர்த்து, நேர்மையுடனும் மனிதாபிமானத்துடனும் ஒன்றிணைந்து எமது மக்களை மீட்டெடுப்போம்." – என்று வடக்கு மாகாண ஆளுநர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தெஹிவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெஹிவளை "ஏக்வாடஸ்" விளையாட்டரங்குக்கு அருகில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்தவர் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இரண்டு பாதாள உலகக் குழுக்களுக்கு இடையே காணப்பட்ட முரண்பாடு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் தெஹிவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# மல்வத்து மகாநாயக தேரரை சந்தித்தார் ஜனாதிபதி அநுர

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முற்பகல் மல்வத்து மகா விகாரைக்கு விஜயம் செய்து, மல்வத்து மகா நாயக அதி வணக்கத்திற்குரிய, திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரை சந்தித்தார்.



தற்போதைய அனர்த்த நிலைமை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து ஜனாதிபதி மல்வத்து மகா நாயக தேரரிடம் விளக்கியதுடன் சிறு உரையாடலிலும் ஈடுபட்டார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டது

நாட்டின் பல மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி கண்டி, கேகாலை, குருணாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு 3ஆம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு 2ஆம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொது இடத்தில் வெற்றிலை உமிழ்ந்த மீன் வியாபாரிக்கு 3000 ரூபா தண்டம்

பொது இடத்தில் வெற்றிலை மென்று உமிழ்ந்த மீன் வியாபாரிக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் 3000 ரூபா தண்டப்பணம் அறிவிட்டுள்ளது.

பருத்தித்துறை நகரில் உள்ள மீன் சந்தையில் மீன் வியாபாரம் செய்யும் போது வெற்றிலை மென்று பொதுவிடத்தில் எச்சில் உமிழ்ந்தவருக்கு எதிராக பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மேற்படி குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 3000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனாதிபதியின் உறுதிமொழி

மழை, வெள்ளம் என்றால் மலையகம் எத்துணை பேராபத்தில் இருக்கின்றது என்பதை அண்மைக்கால பேரிடர் நமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.

தோட்டங்களில் மலை அடிவாரங்களில் கட்டப்பட்ட லயன் குடியிருப்புகளில் உயிரைக் கையில் பிடித்தபடி 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற நெருக்கடியில் வாழும் மலையக மக்களின் நிலைமை நினைத்துப் பார்க்க முடியாத பேரவலமாகும்.

மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்து, தங்கள் வியர்வையாலும் இரத்தத்தினாலும் உயிர் அர்ப்பணத்தினாலும் இந்த நாட்டின் பொருளாதாரத்தையே தூக்கி நிறுத்திய நம் மலையகத் தமிழ் சகோதரர்கள், இரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் இந்த நாட்டில் இனிமேலும் இந்த அடிமை வாழ்வு வாழ்வது, இந்த நாட்டின் ஏனைய ஒவ்வொரு பிரஜைக்கும் மனிதத்துவம் இல்லாத பிரகிருதிகள் என்ற பேரிழுக்கை ஏற்படுத்தும் என்பது மறுக முடியாததாகும்.

இனியும் மலையக மக்களை மலைகளின் மண் சரிவு ஆபத்துகளுக்கு மத்தியில் வாழ வைக்க முடியாது. பெருந்தோட்ட மக்களுக்கு சாலையோர சமவெளிகளில் காணிகள் கொடுக்கப்பட வேண்டும். இதுவரை காலமும் அவர்களுக்கு வழங்கப்படாத காணி உரிமைகள் - உரித்துகள் - அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவர்கள் வீடு கட்டி நிம்மதியாக வாழ இனியாவது வழி செய்யப்பட வேண்டும்.

இந்த விடயத்தை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தமது உரையை முடித்துக் கொண்டு புறப்பட்ட ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் மலையக மக்களின் பிரதிநிதியுமான மனோ கணேசன் நேரடியாகத் தெரிவித்திருக்கிறார்.

அதற்கு இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி, அப்படி மலையக மக்களை மலையக சமவெளிகளில் காணி வழங்கி குடியமர்த்துவதற்குத் தேவையான காணிகளை நாங்களும் நீங்களும் சேர்ந்து தேடுவோம் என்று கூறி, கைகுலுக்கிச் சென்றிருக்கின்றார்.

இப்போது ஏற்பட்ட பேரிடர் அனர்த்தத்தின் பேரவலத்துக்கு - பின்னடைவுக்கு - மத்தியில் மிக நல்ல ஒரு விடயத்தை இலங்கை நாடு முன்னெடுக்க வேண்டும் என்றால், ஜனாதிபதி கூறிய இந்த உறுதி மொழியை முழு அளவில் நடைமுறைப்படுத்த இலங்கை மக்கள் ஒன்றிணைந்து, முழு மூச்சுடனும் ஈடுபாட்டுடனும் முயற்சிக்க வேண்டும்.

இந்த மண்ணுக்காக - நாட்டுக்காக - தங்களையே அர்ப்பணித்த பெருமக்களுக்கு இந்த நாடு பிரதி பலனாக இதைக் கூட செய்யாவிட்டால், இதைவிட கேவலம் கெட்ட நாடு இந்த உலகில் வேறொன்று இருக்க முடியாது.

# 71 நீர்த்தேக்கங்கள் வான் பாய்வதாக அறிவிப்பு



நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 36 பிரதான நீர்த்தேக்கங்கள் உட்பட 71 நீர்த்தேக்கங்கள் தற்போது வான் பாய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்திற்குச் சொந்தமான நீர்த்தேக்கங்களின் மொத்த நீர் கொள்ளளவில் சுமார் 80 சதவீதம் தற்போது நிரம்பியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் எச்.பி.எஸ்.டி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும் மல்வத்து ஓயாவை அண்மித்த பகுதிகளில் சிறிய வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.



# வடக்கில் கால்நடை வளர்ப்போர் தொடர்பு கொள்ள இலக்கங்கள்

வடக்கு மாகாணத்தில் நிலவிய சீரற்ற காலநிலையால், பாதிக்கப்பட்ட கால்நடைகள் தொடர்பான விவரங்களைப் பதிவு செய்வதற்கும், தப்பியுள்ள கால்நடைகளுக்குத் தேவையான அவசர சிகிச்சைகளை வழங்குவதற்குமான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொதுமக்கள் தொடர்புகொள்வதற்கென மாவட்ட ரீதியான தொலைபேசி இலக்கங்களை வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.வசீகரன் வெளியிட்டுள்ளார்.

கால்நடை வளர்ப்பாளர்கள் தமது அவசரத் தேவைகளுக்குப் பின்வரும் உத்தியோகத்தர்களைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:-

✯ வவுனியா மாவட்டம்: நிர்மலன் பெர்னாண்டோ - 077 125 0461

✯ கிளிநொச்சி மாவட்டம்: எம். ராகவன் - 077 625 7977

✯ யாழ்ப்பாணம் மாவட்டம்: வித்தியா நமசிவாயம் - 077 537 4464

✯ முல்லைத்தீவு மாவட்டம்: எஸ். தமிழ்செல்வன் - 077 358 0720

✯ மன்னார் மாவட்டம்: ரேமன் - 076 649 9107

பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான சிகிச்சைகளைத் துரிதப்படுத்தவும், இழப்பீட்டு மதிப்பீடுகள் மற்றும் தரவு சேகரிப்பு நடவடிக்கைகளை இலகுபடுத்தவும் இந்த இலக்கங்களைப் பயன்படுத்துமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.





# அஸ்கிரி மகாநாயக தேரரை சந்தித்தார் ஜனாதிபதி அநுர



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று அஸ்கிரி மகா விகாரைக்குச் சென்று, அஸ்கிரி தரப்பின் மகாநாயக அதி வணக்கத்திற்குரிய வரகாகொட ஸ்ரீஞானரதன தேரரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

தற்போதைய அனர்த்த நிலைமை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து ஜனாதிபதி அஸ்கிரி மகா நாயக தேரரிடம் விளக்கியதுடன், உரையாடலிலும் ஈடுபட்டார்.

பின்னர், ஜனாதிபதி அஸ்கிரிய தரப்பின் அனுநாயக அதி வணக்கத்திற்குரிய நாரம்பனாவே ஆனந்த அனுநாயக தேரரை சந்தித்து, சிறிது நேரம் உரையாடினார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சீன வர்த்தக சபை இலங்கைக்கு 19.5 மில்லியன் ரூபா நிதியுதவி




சீன வர்த்தக சபை இலங்கைக்கு 19.5 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது.

சவாலான காலப்பகுதியில் இலங்கைக்கு சீன நிறுவனங்களின் தொடர்ச்சியான ஆதரவை இந்த நன்கொடை பிரதிபலிக்கிறது.

இது 2 நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் மனிதாபிமான உறவுகளை வலுப்படுத்துவதையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தேசிய மீட்பு முயற்சிகளுக்கு உதவுவதற்கும், தேவைப்படும் சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. .

அத்துடன். சீன வணிகங்கள் இலங்கையின் நீண்டகால வளர்ச்சிக்கு உறுதி பூண்டுள்ளதாகவும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமூக நலனுக்கு மேலும் பங்களிக்கத் தயாராக இருப்பதாகவும் சீன வர்த்தக சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.









# கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தியா அனுப்பிய 9 ஆவது நிவாரணப் பொதி



இந்தியாவிடமிருந்து அனுப்பப்பட்ட 9 ஆவது மனிதாபிமான உதவிப் பொருள்கள், நேற்று பிற்பகல் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

அவசர உதவியின் ஒரு பகுதியாக, இந்த சிறப்பு விமானம் 65 மெட்ரிக் தொன் எடையுள்ள 110 அடி நீள பெய்லிப் பாலத்தையும், ஒரு ஜே.சி.பி. பெக்கோ லோடர் இயந்திரத்தையும் ஏற்றி வந்தது.

தொடர்ச்சி▼





















# கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தியா அனுப்பிய 9 ஆவது நிவாரணப் பொதி

தொடர்ச்சி▲

இந்த பொதியுடன் இந்திய இராணுவ பொறியியலாளர் படையைச் சேர்ந்த 13 பொறியியலாளர்கள் உதவி வழங்குவதற்காக வந்துள்ளனர்.

இந்த நிவாரணப் பொதியை அதிகாரப்பூர்வமாகப் பெற்றுக் கொள்வதற்காக, இந்திய உயர்ஸ்தானிகரக அதிகாரிகள் மற்றும் இலங்கை இராணுவ பொறியியலாளர் படையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று விமான நிலையத்தில் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# பாலம் அமைப்பதற்காக கிளிநொச்சிக்கு 40 இந்திய ராணுவத்தினர் அணி வருகை

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் முழுமையாக அழிவடைந்த பாலத்திற்குப் பதிலான பாலத்தை அமைப்பதற்காக இந்திய இராணுவத்தின் பொறியியல் பிரிவு ஒன்றைச் சேர்ந்த நாற்பது துருப்பினர் கொண்ட அணி கிளிநொச்சிக்கு வருகை தந்துள்ளது.

பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியில் அழிவடைந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலத்தை அமைக்க நேற்று மாலை இந்த இந்திய இராணுவ அணி வருகை தந்துள்ளது.

இவர்கள் இன்றைய தினம் தமது பணியை ஆரம்பிக்கவுள்ளமை தொடர்பில் மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரனுடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

இப் பாலத்தை அமைக்கும் பணி சுமார் ஒரு வார காலத்திற்குள் முழுமைப் படுத்தப்படவுள்ளது.

இப் பணிக்காக வந்த 40 இந்திய இராணுவத்தினரும் கொக்காவில் இராணுவ முகாமில் தங்கி நிற்கவுள்ளனர்.

















# இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை விளாடிமிர் புடினின் வருகை பாதிக்காது

## எஸ்.ஜெய்சங்கர் தெரிவிப்பு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் இரண்டு நாள் இந்திய விஜயம், நடந்து வரும் இந்தியா – அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தைகளை சிக்கலாக்கும் என்ற கருத்தில் உடன்படவில்லை என வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் உறுதியாக தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் பேசிய ஜெய்சங்கர், "புடினின் வருகை இந்தியா – அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை பாதிக்கும் என்ற கருத்தில் நான் உடன்படவில்லை. உலகின் அனைத்து முக்கிய நாடுகளுடனும் இந்தியா நல்ல உறவுகளைக் கொண்டுள்ளது. மற்ற நாடுகளுடன் நமது உறவுகளை எவ்வாறு வளர்த்துக் கொள்கிறோம் என்பதை எந்த நாடும் எதிர்பார்ப்பது ஒரு நியாயமான விஷயம் அல்ல. ஏனென்றால் நினைவில் கொள்ளுங்கள், மற்ற நாடுகளும் அதையே உங்களிடம் எதிர்பார்க்கலாம்.

எங்களுக்கு பல நாடுகளுடன் உறவுகள் உள்ளன, எங்களுக்கு தேர்வு சுதந்திரம் உள்ளது. மேலும் நாங்கள் மூலோபாய சுயாட்சி பற்றி பேசுகிறோம் என்பதை எப்போதும் தெளிவுபடுத்தியுள்ளோம், அது தொடர்கிறது.

அமெரிக்காவில் ஒவ்வொரு அரசாங்கமும் ஒவ்வொரு அமெரிக்க அதிபரும் உலகை அணுகுவதற்கு ஒரு அணுகுமுறையை கொண்டுள்ளனர். அதிபர் ட்ரம்ப்பின் விஷயத்தில், முன்பு இருந்தவர்களை விடவும் அவரின் அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டது என்பதை நான் உங்களிடம் ஒப்புக்கொள்ள முடியும்.

இப்போது எங்களுடைய உறவில் முடங்கிப்போன பல சிக்கல்கள் உள்ளன. சிக்கல்களை சரிசெய்ய முயற்சிக்கிறோம். எங்கள் வர்த்தக நலன்களை மேம்படுத்தும் ஒரு புள்ளி இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு வணிகங்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களைத் தொடரும்போது இந்தியாவின் முக்கிய பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதில் மிகவும் விவேகத்துடன் செயல்படுகிறோம். இந்த காலண்டர் ஆண்டிற்குள் ஒரு தீர்வைக் காண வேண்டும் என்று நாங்கள் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறோம்." – என்றார்.

# புடினுக்கு முர்மு அளித்த விருந்தில் ராகுல் காந்திக்கு அழைப்பு இல்லை!



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று முன்தினம் இரவு அளித்த விருந்துக்கு சசி தரூர் அழைக்கப்பட்ட நிலையில், ராகுல் காந்தி அழைக்கப்படாமை குறித்து காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

இந்தியா – ரஷ்யா உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடியின் அழைப்பை ஏற்று இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் புதுடில்லி சென்றார்.

இந்தியா சென்ற புடினுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று முன்தினம் இரவு விருந்தளித்தார். இந்த விருந்தில், குடியரசு துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள், வெளியுறவுத்துறை உயர் அதிகாரிகள், ரஷ்ய தூதுக்குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த விருந்துக்கு காங்கிரஸ் மூத்த தலைவரும் வெளியுறவுத் துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவருமான சசி தரூருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரும் இதில் கலந்து கொண்டார்.

எனினும், இந்த முக்கிய விருந்துக்கு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியோ, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவோ அழைக்கப்படவில்லை.

இது தொடர்பாக நேற்று முன்தினம் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ்,

"ஜனாதிபதி புடினின் வருகையை ஒட்டி நடைபெறும் அதிகாரப்பூர்வ விருந்துக்கு மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும் அழைக்கப்பட்டுள்ளார்களா என்பது குறித்து ஊகங்கள் எழுந்துள்ளன. இருவருமே அழைக்கப்படவில்லை." என தெரிவித்துள்ளார்.

# தென்னாபிரிக்காவில் துப்பாக்கி சூடு; 11 பேர் உயிரிழப்பு, பலர் படுகாயம்




தென்னாபிரிக்காவின் தலைநகர் பிரிட்டோரியாவில் உள்ள சால்ஸ்வில் விடுதியில் நேற்று அதிகாலை துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

அடையாளம் தெரியாத மூன்று பேர் கொண்ட கும்பல் துப்பாக்கியுடன் விடுதிக்குள் நுழைந்து, அங்கு இருந்தவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர்.

இந்த தாக்குதலில் குறைந்தது 11 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 3 வயது சிறுவன், 12 வயது சிறுவன் மற்றும் 16 வயது சிறுமி உட்பட மூன்று சிறார்களும் அடங்குவர்.

மேலும் 14 பேர் கடுமையாக காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து தென்னாபிரிக்க பொலிஸ் சேவை தெரிவிக்கையில்,

“மொத்தம் 25 பேர் துப்பாக்கிச் சூட்டில் சிக்கினர். 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர், ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார். மூன்று துப்பாக்கி தாரர்களை கண்டுபிடிக்க விசாரணை தீவிரமாக நடைபெறுகிறது” என அதிகாரப்பூர்வ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த சம்பவம், சட்டவிரோதமாக மதுபானம் விற்கப்பட்ட **shebeen** எனப்படும் அனுமதியற்ற பார் அருகே நடந்ததாக பொலிஸ் உறுதிப்படுத்தியுள்ளது. அதிகாலை 4.15 மணியளவில் நடந்த தாக்குதலுக்கான தகவல் பொலிஸாருக்கு 6 மணிக்கு மட்டுமே கிடைத்ததாகவும் கூறப்படுகிறது.

தென்னாபிரிக்கா, உலகின் மிக அதிக கொலை விகிதம் கொண்ட நாடுகளில் ஒன்றாகும். சமீப காலங்களில் தொடர்ச்சியாக நடைபெறும் வெகுஜன துப்பாக்கிச்சூடு சம்பவங்கள், அந்நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து பெரும் கவலை ஏற்படுத்தியுள்ளது.

# சீனா திடீர் இராணுவ நகர்வுகள் கவலை தெரிவித்தது ஜப்பான்





பிராந்தியத்தில் சீன இராணுவ நடவடிக்கைகள் திடீரென அதிகரித்துள்ளன. இந்த விடயம் குறித்து தைவானும் ஜப்பானும் கவலை தெரிவித்துள்ளன.

கிழக்கு ஆசிய கடல் பகுதியில் இந்த வாரம் சீனா ஏராளமான கப்பல்களை நிறுத்தியதுடன், இதுவரை இல்லாத அளவுக்கு அதன் மிகப்பெரிய கடற்படை நகர்வை முன்னெடுத்துள்ளது.

சர்வதேச செய்தி நிறுவனமான ஒன்று வெளியிட்டுள்ள தகவலில், கிழக்கு ஆசிய கடல் முழுவதும் ஏராளமான கடற்படை மற்றும் கடலோர காவல்படை கப்பல்கள், சுமார் 100 இற்கும் மேற்பட்டவை காணப்பட்டன என குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், தைவான் ஜனாதிபதியின் செய்தித் தொடர்பாளர் கரேன் குவோ தெரிவிக்கையில்,

“சீனாவின் செயல்பாடு தைவான் நீரிணையுடன் மட்டும் நின்றுவிடவில்லை, ஆனால் மஞ்சள் கடலில் இருந்து கிழக்கு சீனக் கடலில் உள்ள சர்ச்சைக்குரிய சென்காகு தீவுகளுக்கு அருகிலுள்ள நீர் வழியாக, தென் சீனக் கடல் மற்றும் மேற்கு பசிபிக் வரை நீண்டுள்ளது.” என்றார்.

மட்டுமின்றி, இது உண்மையில் இந்தோ-பசிபிக் மற்றும் முழு பிராந்தியத்திற்கும் அச்சுறுத்தலையும் தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது என்றார். மேலும், ஒரு பெரிய சக்தியாக சீனா தனது பொறுப்புகளை நிறைவேற்றவும், அதன் செயல்களில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும் நாங்கள் குறிப்பாக அழைப்பு விடுக்கிறோம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே, பாதுகாப்புப் படையினர் முழுமையான சூழ்நிலை விழிப்புணர்வைப் பராமரிக்கவும், சரியான நேரத்தில் தகவல்களை வழங்கவும் தைவான் ஜனாதிபதி லாய் சிங்-டே அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், வெளிவரும் தகவல்களை ஜப்பான் அறிந்திருந்தது என்றும் சீன இராணுவ நகர்வுகளை மிகுந்த எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சர் ஷின்ஜிரோ கோபீஸுமி தெரிவித்துள்ளார்.

# லெபனானை ஆக்கிரமிக்க தயாராகி வரும் இஸ்ரேல்



இஸ்ரேல் லெபனானை ஆக்கிரமிக்கத் தயாராகி வருவதாக ஹிஸ்புல்லா பொதுச் செயலாளர் ஷேக் நய்யின் காசிம் தெரவித்துள்ளார்.

நேற்று ஒரு தொலைக்காட்சியில் நடைபெற்ற கலந்துரையாடலில், இஸ்ரேல் போர் நிறுத்தத்தை மீறியதாகக் கூறியுள்ளார்.

லெபனானை ஆக்கிரமிப்பதன் மூலம், ஒரு பெரிய இஸ்ரேலைக் கட்டியெழுப்பத் தயாராகி வருவதாகவும் பொதுச் செயலாளர் குற்றம் சாட்டியுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க ஒருங்கிணைந்த செயல்பாட்டு பொறிமுறை அவசியம்

## கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வலியுறுத்தல்

அனர்த்தத்திற்குப் பிறகு மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க, சாதாரண அரச பொறிமுறைகளுக்கு அப்பாற்பட்ட ஒருங்கிணைந்த செயல்பாட்டு பொறிமுறை அவசியம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

மாவட்டத்தின் நெடுஞ்சாலை கட்டமைப்பு, மின்சாரம், நீர் மற்றும் எரிபொருள் விநியோகம், நீர்ப்பாசனம் மற்றும் தொடர்பாடல் கட்டமைப்புகளை சீர்செய்வது உள்ளிட்ட அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக செயல்படுத்தப்படும் அவசர திட்டங்களின் முன்னேற்றத்தை இதன்போது ஜனாதிபதி தனித்தனியாக மீளாய்வு செய்தார்.

வீதிக் கட்டமைப்பு நிரந்தரமாக அமைக்கப்படும் வரை, அடுத்த 25 நாள்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, வீதிப் புனரமைப்புப் பணிகளை விரைவாக முடிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாவட்டத்தில் நீர் விநியோகத்தை 03 நாள்களுக்குள் முழுமையாக வழமைக்கு கொண்டுவருமாறு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, அதுவரை மக்களின் நீர் தேவைகளை பவுசர்கள் மூலம் பூர்த்தி செய்யுமாறும், இந்த நடவடிக்கைகளில், வழக்கமான செயல்முறைக்கு அப்பால்

தொடர்ச்சி▼















# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க ஒருங்கிணைந்த செயல்பாட்டு பொறிமுறை அவசியம்

தொடர்ச்சி▲

சென்று, அவசரநிலையாகக் கருதி, முப்படையினரிடமிருந்து தொழில்நுட்ப உதவிகளைப் பெறுமாறும் அறிவுறுத்தினார்.

மேலும், வீடுகளில் உள்ள கிணறுகளை சுத்தம் செய்யும் பணிகளை பிரதேச செயலகங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ள அறிவுறுத்திய ஜனாதிபதி, பாரிய சீரமைப்பு பணிகளை இரண்டாம் கட்டத்தில் மேற்கொள்ளும் அதே வேளை, டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் தற்காலிக பழுதுபார்ப்பு மூலம் மாவட்டத்தில் மின்சார விநியோகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலங்களை அடையாளம் கண்டு அவற்றை பயிரிடுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலங்களை விரைவாகக் கண்டறிந்து அவற்றுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தையும், நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவை இணைந்து செயல்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

மேலும், பயிர்ச்செய்கையில் ஈடுபட முடியுமான விவசாயிகளின் எண்ணிக்கை மற்றும் பயிரிடக்கூடிய விவசாய நிலங்களின் அளவை உடனடியாகக் கண்டறிந்து, அவர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள 150,000 ரூபா இழப்பீட்டை உடனடியாக வழங்குமாறும் அறிவுறுத்திய ஜனாதிபதி, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டத்தில் மரக்கறி பயிர்ச் செய்கை குறித்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை பெற்று, அவர்களுக்கு வழங்கப்படும் ஒரு ஹெக்டெயாருக்கு 200,000 ரூபா இழப்பீட்டை வழங்கவும், மரக்கறி பயிர்ச் செய்கைக்கு வழங்கப்படும் அதே இழப்பீட்டுத் தொகையை வாழை பயிர்ச் செய்கைக்கு ஏற்பட்ட சேதத்திற்கு வழங்கக்கூடிய வகையில் தேவையான திருத்தங்களைச் செய்யுமாறும் அறிவுறுத்தினார்.



கால்நடைத் துறைக்கு அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பு குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், பண்ணைகளின் அளவு மற்றும் விலங்குகளின் எண்ணிக்கை குறித்த புதுப்பித்த தரவுகளைப் பேண வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

மாவட்டத்தில் எரிபொருள் விநியோகத்தை சீர்செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், வீதிகள் சேதமடைந்துள்ளதால் எரிபொருள் விநியோகம் தடைப்பட்டுள்ள புஸ்ஸெல்ல மற்றும் மீதலாவ பகுதிகளுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, முப்படையினர் மற்றும் பொலிஸாரின் ஒருங்கிணைப்புடன் நேற்று மாலைக்குள் எரிபொருள் விநியோகத்தை சீர்படுத்துமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

மேலும், கண்டி மாவட்டத்தில் பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், திட்டமிட்டபடி பரீட்சைகளை நடத்துவதற்கு பாடசாலைகளை மீண்டும் திறப்பதில் உள்ள கால இடைவெளியைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

மாவட்டத்தில் சுகாதாரம், ரயில் பாதைகள் மற்றும் தொடர்பாடல் வசதிகளை மீளமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் அந்த மக்கள் மீளக் குடியேறுதல் தொடர்பான நடவடிக்கைகளில் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் வகிபாகம் மற்றும் பணியாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மக்களை மீளக் குடியேற்றுவதற்காக அருகிலுள்ள அரச காணிகளை அடையாளம் கண்டு சமர்ப்பிக்குமாறும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி அந்தக் காணிகளை விடுவிப்பதற்குத் தேவையான தலையீடு செய்யப்படும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

மக்களை மிகவும் பாதுகாப்பாக மீளக் குடியேற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும், முற்றாக அழிக்கப்பட்ட மற்றும் பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கு வழங்கப்படும் இழப்பீடு அந்த நோக்கங்களுக்காக முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

அனர்த்தத்திற்குப் பிறகு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப நீண்ட காலம் எடுக்கும் என்று சிலர் எதிர்பார்த்த போதிலும், மிகக் குறுகிய காலத்தில் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வர அரசாங்கத்தால் முடிந்துள்ளதாகவும், இன்னும் சிறிது காலம் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் எதிர்பார்த்த இலக்குகளை அடைய முடியும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.



# தமிழக அரசின் நிவாரணப் பொருள்களுடன் ஒரு கப்பல் சென்னையிலிருந்து புறப்பட்டது

டிட்வா புயல் தாக்கத்தினால் பாரிய இழப்புகளை எதிர்நோக்கியுள்ள இலங்கை மக்களுக்காக தமிழ் நாடு அரசாங்கமும் நிவாரண உதவிகளை அனுப்பி வைத்துள்ளது. 950 தின் நிவாரண பொருள்கள் இவ்வாறு தமிழ் நாடு மக்கள் சார்பாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

இந்த நிவாரணப் பொருகளைத் தாங்கி வரும் கப்பலை தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் சென்னை துறைமுகத்தில் இருந்து நேற்றுக் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

சென்னையில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட நிவாரண பொருக்களில் 10 ஆயிரம் போர்வை, 10 ஆயிரம் துண்டு, 5 ஆயிரம் வேஷ்டி, 5 ஆயிரம் சேலை, 1,000 தார்பாய் ஆகியவையும், 650 தொன் பருப்பு, சீனி, பால்மா பொதிகள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

இதற்கு தூத்துக்குடியில் இருந்து 300 தொன் பருப்பு மற்றும் சீனி ஆகியவை அனுப்பப்படுகிறது. புயலால் பாதிக்கப்பட் டுள்ள இலங்கை மக்களுக்கு தமிழக அரசு சார்பில் மொத்தம் 950 மெற்றிக் தொன் நிவாரண பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



# தமிழக அரசின் நிவாரணப் பொருள்களை ஏற்றிய மற்றைய கப்பல் தூத்துக்குடியிலிருந்து புறப்பாடு

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழகத்தில் இருந்து நிவாரண பொருகள் அனுப்பி வைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து தூத்துக்குடி துறைமுகத்திலிருந்தும் நேற்று 300 தொன் நிவாரண பொருள்கள் இந்திய கடற்படைக் கப்பலில் அனுப்பி வைக்கப் பட்டன.

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து தமிழ்நாடு அரசின் சார்பில், புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உதவிடும் வகையில் பருப்பு, சீனி, பால் பவுடர் உள்ளிட்ட நிவாரணப் பொருள்களை இலங்கை நாட்டிற்கு கப்பலில் அனுப்பும் பணியை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.இளம்பகவத் தலைமையில் தமிழக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழக முதல்வர் மு. க ஸ்டாலின் அங்குள்ள மக்களுக்கு உதவி புரியும் வண்ணம் சென்னை, தூத்துக்குடி மூலமாக 7 கோடியே 65 லட்சம் ரூபா மதிப்பிலான 945 மெட்ரிக் தொன் நிவாரணப் பொருள்களை அனுப்புகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.







# திருமலையில் அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கில் நேற்று விசேட கலந்தாய்வு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் டித்வா புயலுக்குப் பிந்தைய அனர்த்த நிவாரண முயற்சிகளை, துரிதப்படுத்துவதை மையமாக கொண்டு நேற்று மாவட்ட செயலகத்தில் விசேட கூட்டம் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா, நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாவட்ட அரசாங்க அதிபர், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட பிரதிப்பணிப்பாளர் ஆகியோரும் மெய்நிகர் தொழில் நுட்பத்தின் ஊடாக 11 பிரதேச செயலாளர்களும் பங்குபற்றினர்.

இக்கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ர –

பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் நிவாரணம், மறுசீரமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவைகள் இப்போது துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. முடிந்த வரை விரைவாக இயல்பு நிலையைக் கொண்டு வர அரச நிர்வாகக் கட்டமைப்புக்கள் ஒருங்கிணைப்புடன் செயலபடுகின்றன.நிவாரண நடவடிக்கைகளில் பிரதானமாக பின்வரும் விடயங்கள் கவனிக்கப்பட உள்ளன:–

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரண விநியோகம்.கல்வி செயற்பாடுகளுக்காக இந்த மாதம் 16 ஆம் திகதி மீண்டும் பாடசாலைகளைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட பாடசாலைகளைச் சுத்தம் செய்தல் மற்றும் பழுதுபார்ப்பு மேற்கொள்ளல் என்பன ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மருத்துவ சேவைகளையும் மற்றும் நடமாடும் மருத்துவ கிளினிக்குகளையும் முழுமையாக தொடர்ந்தும் நடத்துதல்.

பாதுகாப்பான குடிதண்ணீர் விநியோகம், திண்ம மற்றும் திரவ கழிவுகளை அகற்றுவது தொடர்பான முகாமைத்துவம், இவற்றிற்கு தேவையான சுகாதார நடவடிக்கைகளை உறுதி செய்தல்.

கால்நடைகள் மற்றும் கோழிப் பண்ணை விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வதற்கான உடனடி உதவிகளை வழங்குதலும், இழப்புகளை மதிப்பிடுதலும்.

சேதமடைந்த விவசாய நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளை விரைவாக மதிப்பீடு செய்தலும், மீளமைத்தலும். இதன் மூலம் எதிர் வரும் பருவத்தில் விவசாய செய்கைகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிதலும்.

மீன்பிடி சமூகங்களுக்கான உதவிகளை வழங்குதல், பாதிப்பிற்குள்ளான அவர்களின் படகுகள் மற்றும் உபகரணங்களுக்கான இழப்பீடுகளை வழங்குதலும்.

ஏற்கனவே மாவட்டம் முழுவதும் நிவாரண மற்றும் மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்ட இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை விரைவுபடுத்துவதற்கும். நமது மக்களைப் பாதுகாப்பதற்கும், ஒற்றுமையுடன் பலமாக மீண்டும் மாவட்டத்தை கட்டியெழுப்புவதற்கும் நாங்கள் முழுமையாக உறுதிபூண்டுள்ளோம். – என்று பிரதி அமைச்சர் தகவல் தெரிவித்தார்.



# இன்றைய ராசி பலன்கள்- 07.12.2025




இன்று மகிழ்ச்சியளிக்கு வகையில் எந்த நிகழ்வும் காணப்படாது. அமைதியாக இருப்பதும் ஆன்மீக ஈடுபாடும் சிறந்தது.

பணியிடத்தில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். பணிச்சுமை அதிகமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கட்டுப்பாடு இழப்பீர்கள். இதனால் விவாதம் ஏற்படும். இது இருவரிடையே காணப்படும் அன்பை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. எதிர்கால தேவைக்காக ஒவ்வொரு பணமும் சேமிப்பது சிறந்தது.

கண்களில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். மருத்துவ பரிசோதனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று வேடிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும் நாள். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை அணுகுமுறை பராமரிப்பீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாகவும் உங்களுக்கு சாதகமாகவும் காணப்படும்.நீங்கள் சிறிது பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று நேர்மறையான ஆற்றல் உங்களிடம் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் அமைதியான சூழ்நிலை காணப்படும். அனுசரனையான மனநிலை காணப்படும்.

பணியிடச் சூழல் திருப்தியை அளிக்கும். நீங்கள் குறைவான முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் அணுகுமுறையில் அர்ப்பணிப்பு காணப்படும். இந்தப் போக்கின் காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பது கடினமாக இருக்கும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இன்று பொறுமையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.

பணியிடச் சூழலில் முன்னேற்றம் அவசியம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அதிக சொந்தம் கொண்டாடுவீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. எனவே எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டும்.

தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவுகளை தவிர்ப்பது நல்லது. காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நேர்மறையான ஒத்துப் போகும் மனநிலை காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடச் சூழலில் பலன்கள் கலந்து காணப்படும். நீங்கள் திறம்பட செயலாற்ற கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிட்டு பணத்தை பயன்படுத்தவும்.

இன்று முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. பதட்டத்தைக் குறைத்து ஆரோக்கியத்தை பராமரியுங்கள்.




இன்று விழிப்புணர்வை பராமரிக்க வேண்டிய நாள். உங்கள் வீட்டில் சுப நிகழ்சிகள் ஏதாவது இன்று திட்டமிட்டிருந்தால் அதனை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது சிறந்தது.

பணியைப் பொறுத்தவரை இன்று மும்மரமான நாள். சிறந்த செயல்திற னுக்கு நீங்கள் கூடுதல் முயற்சிகள் எடுக்க வேண்டும்.உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவு சுமூகமாக இருப்பது உங்கள் கையில் தான் உள்ளது.

நிதி வளர்ச்சி ஸ்திரமாக இருக்காது. நீங்கள் பணம் வீணாகாமல் தடுக்க சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை காணப்படும். ஒவ்வாமை காரணமாக தொண்டையில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். சாதகமான பலன்களை அளிக்கும். நீங்கள் திருப்தியை உணர்வீர்கள்.

நீங்கள் சகஜமாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நேர்மறை போக்கின் காரணமாக உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் உறுதியும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்றைய விளைவுகளை எண்ணி வருத்தப்படுவதை விட அமைதியாக இருப்பது சிறந்தது. அதிர்ஷ்டமற்ற நிலையை சமாளிக்க நீங்கள் நம்பிக்கையுடன் இருப்பது சிறந்தது.

பணி சம்பந்தமான பயணம் மகிழ் சிகரமாக இருக்காது. பயணத்தின் போது தேவையற்ற பதட்டம் காணப்படும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும். இதனை எளிதாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்திய உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 07.12.2025




இன்றைய நாளை நன்கு செலுத்த நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். நேர்மறை எண்ணங்களை வளர்க்க வேண்டும்.

நீங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். கொள்கைகளை பின்பற்றுவதன் மூலம் நன்மை பெறலாம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை இன்று சுமூகமாக இருக்காது. உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம். என்றாலும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று நல்ல மாற்றங்கள் ஏற்படும். வருகின்ற வாய்ப்புகளை முறையாக பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் பல நன்மைகளைப் பெறலாம்.

பணி மாற்றம் மற்றும் பணி சம்பந்தமான பயணம் நேரலாம். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கலாம்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்வீர்கள். உங்களின் உரையாடும் விதம் காரணமாக நல்ல சூழல் உருவாகும்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை பலன்கள் கலந்து காணப்படும். வரவு செலவு இரண்டும் கலந்து காணப்படும். உங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமான நாள். கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாக முடிப்பீர்கள்.

நீங்கள் திருப்தியான நிலையை உணர்வீர்கள். உங்கள் திறமையை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியும் நல்லுறவும் காணப்படும். உங்கள் துணையைப் பற்றி நேர்மறையான அன்பான எண்ணம் கொண்டிருப்பீர்கள்.

நிதிநிலைமையில் முன்னேற்றம் காணப்படும். இன்று சீரான நிதி நிலைமை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று ஒழுக்கமான போக்கும் மன உறுதியும் காணப்படும்.




ஒழுக்கமான வாழ்வு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை உயர்ந்து காணப்படும். நல்ல உறுதி காணப்படும்.

உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வெற்றி கிட்டும். உங்கள் தொழிலில் சுறுசுறுப்பு காணப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமை காணப்படும். சேமிப்பும் உயரும். பயனுள்ள புதிய முதலீட்டிற்கு உகந்த நேரம்.

# ஐஸ், ஹெரோயினுடன் படகு ஒன்று சனி இரவு கற்பிட்டிக்கு அருகில் கடற்படையிடம் சிக்கியது



கற்பிட்டிக்கு அருகிலுள்ள கடலில் நேற்று முன்தினம் இரவு ஹெரோயின் மற்றும் கிரிஸ்டல் மெத்தம்பேட்டமைன் (ஐஸ்) போதைப்பொருள்களுடன் படகு ஒன்றை இலங்கை கடற்படை கைப்பற்றியுள்ளது.

மூன்று பைகளில் அடைக்கப்பட்ட 63.718 கிலோ ஐஸ் மற்றும் 14.802 கிலோ ஹெரோயின் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள் பொலிஸ் போதைப்பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கல்பிட்டியைச் சேர்ந்த படகின் உரிமையாளரைக் கைது செய்ய பொலிஸ் போதைப்பொருள் பணியகம் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.